**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 04/03/2024, திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ராஜா | த/பெயர் - முனுசாமி |
| வயது - | தொழில் - |
| விலாசம் - | |

**குறுக்கு விசாரணை (PW1)**

நான் இந்த வழக்கின் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். எனது மனைவி தரப்பினர் எனது மனைவி சார்பாக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். எனது மனைவி தரப்பாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அனுமதியோ அல்லது மனைவியம் அதிகாரமோ பெற்றுள்ளேனா என்றால் எனது மனைவியிடம் அதிகாரம் பெற்றுள்ளேன். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எனது மனைவிக்கு உடல்நிலை சரியல்லை என்பதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி வாடகை தருவதாக ஒப்புக்கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி வாடகை தந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் வாடகை தரவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. மின் இணைப்பு எனது மனைவி பெயரில் இல்லை என்றால் சரிதான் பிரதிவாதி காலி செய்யும் போது மின்இணைப்பை துண்டித்து செல்வதாக கூறினார். தாவா சொத்தை வாங்கியவர் பிரதிவாதிவாதிதான் அவர் கம்பெணி வைத்து நடந்துகிறாா் என்றால் எனக்கு தெரியாது. அங்கு அவ்வாறு ஒரு நிருவணம் இல்லை வெறும் தார் சீட் மட்டுமே போடப்பட்டுள்ளது.

02.11.2020ல் பழனிக்கு அறிவிப்பு **வாசா ஆ 10** அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு இருந்தே பிரதிவாதி மேற்படி நிருவணத்தை நடத்திவருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்திலும் அவர் மேற்படி நிருவணத்தை நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. அதில் இரு நபர்கள் மட்டுமே வேலை செய்கிறார்கள். தாவா சொத்தில் உள்ள கட்டிடம் பிரதிவாதியால் கட்டப்பட்டது என்றால் அங்கு கட்டுமானம் எதுவும் கிடையாது தார் பாய் மட்டுமே உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி கிரையம் பெற்ற வாசா ஆ 1 சொத்து விவரத்தில் பிரதிவாதி கம்பெனி குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே உரிமையாளர் உறவோ மற்றும் குத்தகைதாரர் உறவோ வாடகை தாரர் உறவு இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக கோரிய பரிகாம் சட்டபடி வழங்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வாசா ஆ 3 ஆவணம் படி முனுசாமி மற்றும் ஏழுமலை என்பவர் சுந்தரமூர்த்தி என்பவரிடம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிக்கு முனுசாமியும் ஏழுமலையும் தான் வாடகைக்கு ரூபாய் 800/- விட்டார்கள் என்றால் சரியல்ல. என்படி பிரதிவாதி தாவா சொத்தில் கட்டிடம் உள்ளதா, தார்பாய் உள்ளதா, மின் இணைப்பு உள்ளதா என்பது குறித்து நீதிமன்ற ஆணையர் அமைக்க கோரி மனு செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அடிமனை வாடகை முனுசாமி மற்றும் ஏழுமலை என்பவரிடம் 14.07.2021 முதல் மாத வாடகை ரூபாய் 1500/- செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. எனது மனைவி 2019ல் கிரயம் பெற்று விட்டார் 2021 புது வாடகை தருவது என்பது சாத்தியம் அல்ல சரியல்ல. பிரதிவாதி ரூபாய் 50,000/- முனுசாமி மற்றும் ஏழுமலைக்கு முன்பணம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை முனுசாமி

ஏழுமலை 2004ல் கிரையம் பெற்றார். 2006 முதல் பிரதிவாதி தாவா சொத்தில் தொழில் செய்துவருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தன் மகனுக்கு அவரது தங்கை மகனை திருமணம் செய்துவைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2009ல் முனுசாமி மற்றும் ஏழுமலை ரூபாய் 2 லட்சம் கைலாஸ் என்பவரிடம் கடன் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அடமான பத்திரம் மட்டுமே ஏற்ப்படுதினார்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**